## எழுத்தை வாழ்தல் - 2

## காஃப்கா தன் எழுத்துக்களை ஏன் எரித்துவிடச் சொன்னார்?

-----------------------------------------------------------------------------------------------------------------------.

இந்திரன்

" சொல்லப்படாத ஒரு கதையை உனக்குள் வைத்திருப்பதைக்

காட்டிலும் பெரிய துயரம் ஏதுமில்லை". - மாயா ஏஞ்சலோவா

" இலக்கியத்தை வாழ்தல் " என்பது ஒரு காலத்தில் எனது கனவு வாக்கியமாக இருந்தது. கஷ்டம் வரும்போதெல்லாம் கந்தர்சஷ்டி கவசத்தை சொல்பவர்கள் போல நான் அந்த இரண்டு சொற்களை என் மனதுக்குள் அடிக்கடி சொல்லிக் கொள்பவனாக இருந்தேன். நான் அப்போது மகராஷ்டிராவின் அவுரங்காபாத் நகரத்திலும், மும்பையிலும் வாழ்ந்து கொண்டிருந்தேன். அவுரங்காபாத்தின் மார்க்கட்டில் ஒரு ஹனுமார் கோயில் இருந்தது. அதன் வாசலில் ஒரு குருட்டுப் பிச்சைக்காரர் சப்பணம் போட்டு அமர்ந்து கொண்டு " ராம் ...ராம்...ராம்..ராம் " என்று இடைவிடாமல் ஜபித்துக் கொண்டிருப்பார். அவரைச் சுற்றி நடந்தேறிய சந்தைக் கூச்சல் அவர் காதில் ஏறுவதாகத் தெரிந்ததே இல்லை. ஏறத்தாழ நானும்கூட "இலக்கியத்தை வாழ்தல்" என்பதை இடைவிடாமல் ஜபித்துக் கொண்டிருந்த ஒரு பிறவி பார்வையற்றவராகத்தான்